செ.வெ. எண்: 504 நாள்: 30.08.2012

செய்தி வெளியீடு

ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கிணங்க, சிறப்பான கல்வியை அனைத்துத் தரப்பு மக்களும் எந்தவித இடையூறும் இன்றி பெற வேண்டும் என்ற அடிப்படையில், கல்வி கற்க ஊக்கத் தொகை, சத்துணவு, விலையில்லா சீருடைகள், புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், மிதிவண்டி, மடிக்கணிணி ஆகியவை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

சமூக நல இயக்ககத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் 27 அரசு குழந்தை காப்பகங்கள் மற்றும் 7 சேவை இல்லங்கள் மூலம் ஆதரவற்ற மற்றும் ஏழைக் குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு உணவு, உறைவிடம், சீருடைகள் மற்றும் கல்வி வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த இல்லங்களில் பயிலும் ஏழைக் குழந்தைகள் தங்கள் துணிகளை தாங்களே துவைத்துக் கொள்வதால், அவர்கள் பயிலும் நேரம் வீணாகிறது.

எனவே, இந்த இல்லங்களில் பயிலும் ஏழைக் குழந்தைகளின் பணிச் சுமையினை குறைக்கும் வகையிலும், துணி துவைக்கும் நேரத்தினை கல்விக்காகவும், ஓய்விற்காகவும் செலவிட ஏதுவாகவும், தமிழ்நாட்டில் உள்ள 27 அரசு குழந்தைகள்காப்பகங்கள் மற்றும் 7 அரசு சேவை இல்லங்களுக்கும் தொழிற்சாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் பயன்படுத்தக்கூடிய தரம் வாய்ந்த 34 சலவை இயந்திரங்களை தலா 3 லட்சத்து 50 ஆயிரம் வீதம் வாங்கி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்கென 1 கோடியே 20 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், அரசு காப்பகங்களில் உள்ள குழந்தைகள், தங்களுக்கு கிடைக்கும் ஓய்வு நேரங்களில், தங்களது கல்வியில் தனிக்கவனம் செலுத்தி நன்முறையில் தேர்ச்சி பெற வழிவகை ஏற்படும்.

*******

வெளியீடு:- இயக்குநர், செயதி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :- 30.8.2012.